மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்) : பேரவை முன்னுள்ள கேள்வி—

"1974-ம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 11/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, "1974 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/74) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/74).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

[மாற்றுத் தலைவர்] [1974 ஏப்ரல் 10

தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/74) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/74).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."
என்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீது உச்சவரம்பு கட்டுதல்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 58/1961) செயலுக்குவரத் தொடங்கிய நாளன்று உச்சவரம்புக்கு மேற்பட்டு நிலம் வைத்திருக்கும் ஒருவரது நிலத்தின் உச்சவரம்பினை முதல் முறையாக நிர்ணயிப்பதற்காக அதிகாரம் பெற்ற அதிகாரியால் அறிவிப்புத் தேதி அன்று அல்லது அதன்பின்னரும் 12 அல்லது 14 ஆவது பிரிவின் கீழ் இறுதியான அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னரும் செய்யப்பட்ட மாற்றம் அல்லது உட்பிரிவினையைக் கருத்தில் கொள்ளக்கூடாது என்று மேற்படி சட்டத்தில் 23 ஆவது பிரிவு வகை செய்கிறது. அறிவிப்புத் தேதி அன்று அல்லது அதற்குப் பிறகும் 12 அல்லது 14 ஆவது பிரிவின் கீழ் இறுதி அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னரும் செய்யப்பட்ட ஒரு விற்பனையை செல்திறன் அற்றது என்று அறிவிக்க

---

* 3-1-1974-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.